




தென்திசையின் வார்ப்பு

## வீரமங்கை ராணி வேலு நாச்சியார்

அவர்களுக்கு சென்னை காந்தி மண்டப வளாகத்தில் சிலை அமைக்க சட்டமன்றத்தில் அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி ! நன்றி !! நன்றி !!!.

சும்மா கிடைத்திடவில்லை சுதந்திரம். இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரம் பலரது உழைப்பாலும், உறுதியாலும், வீரத்தாலும், சிந்திய வியர்வையாலும், ரத்தத்தினாலும் கிடைத்ததே. அந்த வகையில் ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்து, போரிட்டு வெற்றி கண்டு மீண்டும் ஆட்சியை பிடித்து தனக்குப் பின்னால் அந்தப் பகுதியில் எவரையும் நுழையவிடாமல் கட்டிக்காக்கப்பட்டவரலாறு இந்தியாவில் வேலுநாச்சியாரைத் தவிர வேறு யாருக்கேனும் உண்டா ?

1730 – 1750 வரை 20 ஆண்டுகள் ராஜா விஜயரகுநாத பெருவுடையார் சசிவர்ணர் ஆட்சி. 1750 முதல் 1772 வரை 22 ஆண்டுகள் அவருடைய மகன் முத்துவடுகநாதர் பெருவுடையார் வேலுநாச்சியாரின் கணவரின் ஆட்சி. சிவகங்கை அரசர் முத்துவடுகநாதர் தனது 22 வருட ஆட்சி காலத்தில் எந்தப் போரிலும், எவரிடத்திலும் பின்வாங்காது வெற்றி பெற்றவர்.

சிவகங்கை அரச அவை மண்டபத்தில் அரசர் முத்து வடுகநாதர் தனது மனைவி வேலுநாச்சியருடன் இருந்தார். எதிரே தளபதி லெப்ட்டினன்ட் ஜெனரல் ஜோசப் ஸ்மித் ஆற்காட்டு நவாபுடன் சேர்ந்து அமர்ந்து கப்பம் கட்டவேண்டும் என்று ஆங்கிலத்தில் கேட்டு, 'ஓ' அரசருக்கு ஆங்கிலம் தெரியாதோ என்று கூறிய ஜெனரல் ஜோசப் ஸ்மித்தை பார்த்து அரசி வேலு நாச்சியார், எங்களிடம் பேச வரும் நீ தமிழ் கற்றிருக்க வேண்டும். எந்த மொழியில் உன்னிடம் பேச வேண்டும் சொல், என்று கூறி வட மொழி, தென் மொழிகள் ஆகிய பத்து மொழிகளில் பேசி, பதினோராவது மொழியாக ஆங்கிலத்தில் உனக்கு பதில் கூறுகிறேன் கேள் என்றார். உனக்கு எதற்கு நாங்கள் வரி செலுத்த வேண்டும். இன்னொரு முறை வரி கேட்டாய் என்றால் உன் வாயைக் கிழித்து மீண்டும் தைத்து அனுப்பி விடுவேன் என்று கர்ஜித்து அவர்களை அவமானப்படுத்தி வெளியேற்றினார் வேலுநாச்சியார்.

இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை ராஜ்ஜியங்கள் தனது கட்டுப்பாட்டிலுள்ளன என ஆற்காடு நவாப் கடிதம் எழுதியிருந்த கூற்றை நம்பாமல், அந்த ராஜ்ஜியங்களின் நிலைபற்றி அறிய சென்னை மாகாண கவர்னர் ஜோசையா டூப்ரே அவர்கள், வாரன் ஹேஸ்டிங் மற்றும் சாமுவேல் ஆர்டலி ஆகியோரைரைக் கொண்ட ஒரு செலக்ட் கமிட்டியை அமைத்து அறிக்கை கேட்டிருந்தார்.

03.01.1771–ல் அவர்கள் கொடுத்த அறிக்கையில் இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று ராஜ்ஜியங்களும் தன்னாட்சி பெற்ற, எவருக்கும் தலைவணங்காத, எப்போதும் எவருக்கும் கப்பம் கட்டாத சுதந்திரமான குடியாட்சியுடன் கூடிய முடியாட்சி ராஜ்யங்களாகும் என கூறியிருந்தனர்.

திருச்சியிலிருந்து தளபதி ஜெனரல் ஜோசப் ஸ்மித் மற்றும் நவாப்பின் மகன் உமர் தத்துல் உம்ரா ஆகியோரின் கூட்டுத் தலைமையிலும், மதுரையிலிருந்து லெப்ட்டினன்ட் கர்னல் பாஞ்சூர் தலைமையிலும், பீரங்கி, வெடிகுண்டு மற்றும் துப்பாக்கிப் படை வீரர்களுடன் காளையார் கோயிலைத் தாக்குகின்றனர். சமாதான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட காலம் என்பதால் பாதுகாப்பு படைகளை எல்லாம் அனுப்பி விட்டு அமைதியாக ஆலய வழிபாட்டில் திளைத்திருந்த அரசர் முத்து வடுகநாதரிடம், ஆங்கிலேயர் படைகள் தாக்க வந்த செய்தி பற்றி கூறப்பட்டது. இந்த செய்தியை சிறிதும் நம்பாத அரசர் முத்துவடுகநாதர் உருவிய வாளுடன் வெளியில் வந்து பார்த்தார். அதற்குள் துப்பாக்கி குண்டுகளால் மன்னரை சுட்டு விட்டு தலைநகர் சிவகங்கையைக் கைப்பற்ற பாஞ்சூரின் படைகள் பறந்தன. மன்னர் சுடப்பட்ட செய்தி கேட்டு சக்கந்தியிலிருந்து தன் மகள் வெள்ளச்சி நாச்சியாருடன் மின்னலென குதிரையில் பாய்ந்து ஏறி காளையார் கோயில் வந்தடைந்தார் ராணி வேலுநாச்சியார். குற்றுயிருடன் கிடந்த தன் குலநாயகர் அரசர் முத்துவடுகநாதரைத் தன் மடியில் கிடத்தினார். உயிர் பிரியும் தருவாயில் இருந்த அரசர் முத்துவடுகநாதர் மனைவி ராணி வேலு நாச்சியாரிடம் உன் மாங்கல்யத்தைக் கழட்டாதே, உன் மங்களக் குங்மத்தை அழிக்காதே. விருப்பாச்சி சென்று கோபால் நாயக்கரை அழைத்துக் கொண்டு, திண்டுக்கல் சென்று ஆங்கிலேயருக்கு அடங்காத என் நண்பர் சுல்தானைப் பார். நம்மிடம் இல்லாத துப்பாக்கி, பீரங்கிக்குண்டுகள் போன்ற போர் தளவாடங்களை அவரிடம், பெற்று மீண்டும் சிவகங்கை வந்து ஆங்கிலேயருடன் போரிட்டு ஆட்சியைப் பிடித்த பின், உன் குங்குமத்தை அழித்து சபதத்தை நிறைவேற்று என்று கூறி முடித்தவுடன் அரசர் முத்துவடுகநாதரின் உயிர் பிரிந்தது. உடனே தன் மகள் வெள்ளச்சி நாச்சியாருடன் குதிரையில் விருப்பாச்சி நோக்கி ராணி வேலுநாச்சியார் பறந்தார்.

ராணி வேலுநாச்சியாரின் தூதுவர் போல் தானே வேடம் அணிந்து கோபால் நாயக்கருடன், திண்டுக்கல் சென்று மைசூரிலிருந்து வந்திருந்த அரசர் ஹைதர் அலியை, அவரது மகன் திப்பு சுல்த்தான் மற்றும் அவரது மைத்துனர் சையது சாகிப் முன்னிலையில் சந்தித்தார். இராணியார் படை உதவி கேட்டு அனுப்பியதாக உருது மொழியில் செய்தி கூறினார். ஆங்கிலேயரை எதிர்த்துப்போராட சிவகங்கை சீமைக்கு துப்பாக்கிகள், பீரங்கி குண்டுகள், படைகள் அனுப்புவதாக நண்பர் முத்துவடுகநாதரிடம் நான் கூறியிருந்தது உண்மையே. இருந்தாலும் இன்றைய கள நிலவரங்கள் போர் வியூகங்கள் பற்றி உங்கள் ராணி (வேலுநாச்சியார்) அவர்களிடம் நேரில் பேசி தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதற்கு வாய்ப்பு உண்டா என்று கேட்டார். உண்டு என உருது மொழியில் கூறிய தூதுவரிடம், எப்போது வாய்ப்புக் கிட்டும் எனக் கேட்ட சுல்த்தானிடம் இப்போதே என உருது மொழியில் கூறி தனது தூதுவர் வேடத்தைக் கலைத்து, வேலுநாச்சியராக எதிரில் நின்றார். எவ்வளவு படைகள் வேண்டுமென்றாலும் எடுத்துச் செல்லுங்கள். அந்த துப்புக்கெட்ட ஆங்கிலேயரை அடித்துத் துரத்துங்கள் தாயே என்று வணங்கினார் திப்பு.

வேலுநாச்சியார், பாரதியார் மற்றும் வ.உ.சி ஆகிய விடுதலைப் போர் தியாகிகளின் ஊர்திகள் டெல்லி குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்டு மோடி அரசால் தடை செய்யப்பட்டது. தமிழ்நாட்டின் முக்கிய தலைநகரகங்களில் அவற்றை அணிவகுத்து மக்களைப் பார்வையிடச் செய்தவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

வேலுநாச்சியாரின் வீரவரலாற்று காவியத்தை 60 கலைஞர்கள் பங்கேற்ற ஸ்ரீராம் சர்மா அவர்களின் இசையார்ந்த நடன நாடகத்தை, அரசின் சார்பாக, மாவட்டத் தலைநகரங்களில் நடத்தி, பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்தவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிக்கான இலட்சிணையாக திருவள்ளுவர் (லோகோ) மற்றும் வேலுநாச்சியாரின் (மஸ்கட்) உருவங்களை பொறித்ததுடன், அப்போட்டிகளின் நிறைவு விழாவுக்கு வருகை தந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் மோடி அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், வேலுநாச்சியாரின் சிலையைப் பரிசாக வழங்கி பெருமை சேர்த்தவர் நம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

இவைகளுக்கெல்லாம் முத்தாய்ப்பாக தமிழ்நாட்டில் குவிந்த பலரது வேண்டுகோள்களின்படியும், வேலுநாச்சியாரின் 294வது பிறந்த நாளான 03.01.2024 அன்று கேட்டிருந்த, அவரின் வழித் தோன்றல்களான எங்களின் கோரிக்கைகளையும் ஏற்று, சென்னை காந்தி மண்டபத்தில், வீரமங்கை ராணி வேலுநாச்சியாருக்கு சிலை அமைத்திடவும், அதற்காக ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது லட்சம்) நிதியும் ஒதுக்கி, சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்த, கழகத் தலைவர்,

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

# மு.க.ஸ்டாலின்

அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

வீரமங்கை வேலு நாச்சியாரின் வழித்தோன்றல்கள்

முனைவர் பிரபா நாச்சியார், Er. ஜெயஸ்ரீ நாச்சியார், Dr. மோகனா நாச்சியார், சங்கீதா நாச்சியார் USA. இவர்களுடன்

# அக்ரி கணேசன்

கழக தீர்மானக் குழுச் செயலாளர்

சித்தனேந்தல் கிராமம், காரியாபட்டி ஒன்றியம், இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கொய்யாத்தோப்பு திட்டப்பகுதியில் ரூ.61.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 324 அடுக்குமாடி குடியிருப்பினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் உட்பட பலர் உள்ளனர்.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் கட்டப்பட்டு வரும்

## அடுக்குமாடிக் குடியிருப்புகள் : அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

### நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகளையும் ஆய்வு செய்தார்!

சென்னை,ஆக.21-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.8.2024) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் நாவலர் நெடுஞ்செழியன் நகர் (ம) சிந்தாதிரிப்பேட்டை, கொய்யாத்தோப்பு ஆகிய திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளையும் மற்றும் பம்பிங் ஸ்டேஷன் சாலை திட்டப்பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்படும் இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாவலர் நெடுஞ்செழியன் நகர் (ம) சிந்தாதிரிப்பேட்டை திட்டப்பகுதியில் ரூ.76.87 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 450 அடுக்குமாடி குடியிருப்புகளும் மற்றும் கொய்யாத்தோப்பு திட்டப்பகுதியில் ரூ.61.20 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 324 அடுக்குமாடி குடியிருப்புகளும், பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனை தொடர்ந்து பம்பிங் ஸ்டேஷன் சாலை திட்டப்பகுதியில் அப்பகுதியில் வாழும் மக்களுக்காக ரூ.75 கோடி மதிப்பீட்டில் சுமார் 400 அடுக்கு மாடி குடியிருப்புகள் அமைய வுள்ள இடத்தினை பார்வையிட்டார்.

முன்னதாக சென்னை மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் நடைபெற்று வரும் அடுக்கு மாடி குடியிருப்பு பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வு கூட்டம் நடத்தினார்.

இந்த ஆய்வு நிகழ்ச்சியில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் தேனாம்பேட்டை மண்டல குழு தலைவர் மதன்மோகன், தலைமை பொறியாளர் சு.லால் பகதூர், மேற்பார்வை பொறியாளர் (பொ) இளம்பரிதி, நிர்வாகப் பொறியாளர் வாஞ்சிநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

### பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் – கழக முப்பெரும் விழாவை

## காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியத்தில் சிறப்பாக கொண்டாடுவோம்!

### ஒன்றியக் கழக கூட்டத்தில் தீர்மானம்: க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*காஞ்சிபுரம், ஆக.21*

*காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் கீழ்ஆம்பி ஏ.ஜெ.எஸ். திருமண மண்டபத்தில் காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் பி.எம். குமார் வரவேற்பிலும் ஒன்றிய அவை தலைவர் எஸ். மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.*

*மாவட்ட கழக துணை செயலாளர் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க. செல்வம், கழக மாணவர் அணி செயலாளர் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கினார்கள்.*

*இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மலர்கொடி குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், ஒன்றிய துணை செயலாளர்கள் இரா.நெடுஞ்செழியன், எஸ்.வி.ரமேஷ், மகாலட்சுமி, ரா.ஜே. சேகர், ஒன்றிய பொருளாளர் அ.வேலுச்சாமி, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.எஸ்.ஆர். சசிக்குமார், பி.என்.ரவி, நா.கருணாகரன் மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பூத் முகவர்கள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.*

*இந்நிகழ்ச்சியில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*18—ந் தேதி சென்னையில் நடைபெற்ற ஓய்வறியாமல் உழைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உருவம் பொறித்த நூறு ரூபாய் நாணயத்தை வெளியிட்டு தந்தை பெரியாரின் சமுகநீதி பேரறிஞர் அண்ணா அவர்களின் கடையை, கண்ணியம், கட்டுப்பாடு, வழிவந்த தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்த பெருமையாகவும் மணிமகுடமாகவும் விளங்க செய்த கழக தலைவர் அவர்களுக்கு இந்த ஒன்றிய கழகம் நன்றி தெரிவித்து நிர்மாணிக்கப் பட்டது.*

*நடந்து முடிந்த நாடாளு மன்ற தேர்தலில் திராவிட மாடல் நல்லாட்சியின் சான்றாக 40 நாடாளுமன்ற தெகுதியிலும் மகத்தான வெற்றியை நமது கழக தலைவர் மற்றும் இளந்தலைவர் அவர்களின் உழைப்பால் பெற்றோம். இந்த தேர்தலில் காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியத்தில் பெருவாரியான வாக்குகள் பெற நம்மை ஊக்கப்படுத்திய மாவட்ட கழக செயலாளர், உத்தரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர், கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் மற்றும் இந்த வெற்றிக்கு உழைத்த ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள், மூத்த முன்னோடிகள் அனைவருக்கும் ஒன்றிய கழக சார்பாக நன்றி தெரிவித்து தீர்மானிக்கப்பட்டது,*

*பேரறிஞர் பெருந்தொகை அண்ணா அவர்களின் பிறந்தநாளில் பொன்னேரிக்கரை அண்ணா நூற்றாண்டு நினைவு தூண் அருகில் கழக கொடி ஏற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடிட வேண்டும் எனவும், அனைத்து கிளை கழகங்களிலும் கழக கொடி ஏற்றி கொண்டாடிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*தலைமை கழகத்தின் சார்பில் நடைபெறும் முப்பெரும் விழா ஒன்றிய கழக சார்பில் திறளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.*




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னணியினர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.